ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 6 இதழ் : 7

மே – 2010

செய்திமலர்



## சபைகள்

## விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின.

அப்போஸ்தலர் 16 : 5



ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்




சுதேச ஊழியர் சாட்சி

## விகாஸ் கராசியா

இராஜஸ்தான்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். என்னுடைய பெயர் விகாஸ் கராசியா. நான் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தைச் சேர்ந்த கராடியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஒன்றும் அறியாதவனாய், அனைத்து விதமான பாவங்களையும் செய்து வாழ்ந்து வந்தேன். மேலும் அசுத்த ஆவியின் பிடியில் சிக்குண்டு உள்ளத்திலும், இல்லத்திலும் சமாதானம் இல்லாமல் வாழ்ந்துவந்தேன். 2001ம் ஆண்டு இராஜஸ்தானில் ஷாலோம் ஊழியத்தின் மூலம் இயங்கிவரும் பள்ளியில் வேலைக்குச் சேர்ந்தேன். அன்று முதல் தேவன் என்னோடு இடைபட ஆரம்பித்தார். மேலும் ஜெபத்தின் மூலம் ஆசுத்த ஆவிகளின் பிடியில் இருந்து விடுதலை பெற்று, தெய்வீக சமாதானத்தை எனது உள்ளத்திலும், இல்லத்திலும் பெற்றுக்கொண்டேன். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக முழுமையாக ஏற்றுக்கொண்டேன். 2004ம் ஆண்டு நடைபெற்ற ஷாலோம் ஊழியர் கூடுகையில் தேவன் என்னை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்து, தரிசனத்தின் மூலம் ஊழியத்திற்கு அழைத்தார். தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து உதயப்பூர் வேதாகமக் கல்லூரியில் B.Th., படித்த முடித்து, தற்போது போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு, இராஜஸ்தான், ஹஜ்மால் என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். இந்த கிராமத்தில் தேவ நாம மகிமைக்காக புதிதாக ஒரு ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆராதனை நடைபெற்று வருகிறது. மேலும் ஷாலோம் ஊழியத்தில் சுதேச ஊழியர்களை உருவாக்கும் பயிற்சியில் தேவன் என்னையும் பயன்படுத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Pr. Stephen, IPM Church ,** Tuticorin.

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!***

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள். உங்களுடன் இந்த மே மாத இதழின் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் தேவன் நம்மோடு கூட இருந்து நம்மை வழிநடத்தினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஜெபித்து தாங்கி வந்த உங்கள் யாவருக்கும் எனது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏப்ரல் மாதத்தில் **1–4** நாட்கள் பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். குறிப்பாக கர்த்தருக்குள் வெகு பக்தியுடன், தேவ பிரசன்னத்துடன் அனைத்து சபைகளிலும் புதிதாக கர்த்தருக்குள் வந்த ஏராளமானோர் ஞானஸ்நானம் பெற்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

ஏப்ரல் **12–16** தேதிகளில் மருத்துவ முகாம்கள் **5** இடங்களில் நடத்த தேவன் கிருபை தந்தார். மருத்துவ முகாம் பற்றிய தகவல்களை உள்ளே கொடுத்துள்ளோம். குறிப்பாக **Dr. Shiju** அவர்கள் 1 வருடம் மருத்துவ ஊழியம் செய்ய அர்ப்பணித்து இணைந்துள்ளார்கள். தொடர்ந்து மருத்துவ பணிகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

ஏப்ரல் **17,18,19** தேதிகளில் சென்னையைச் சேர்ந்த Pas. ஸ்டீபன் ஜோசுவா அவர்கள் சபை மூப்பர்கள் மூன்று பேருடன் மத்தியப்பிரதேசத்தில் ஹசால்வாட் கிராம ஆலயத்தையும், காசார்வாடி கிராம ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்தார்கள். ஏப்ரல் **21–23** தேதிகளில் மார்த்தாண்டம் AG சபை **Pr. ஆமோஸ்** அவர்களும் **Pr. ஏசுதாஸ்** அவர்களும் பணித்தளத்திற்கு வருகை தந்து, இராஜஸ்தானிலுள்ள அம்பாபாட கிராம ஆலயத்தையும், மத்தியப்பிரதேசத்திலுள்ள வட்டா கிராம ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

மேலும் தேவனுடைய வழிநடத்துதலின்படி ஏப்ரல் **19** முதல் **29** வரை **5** பிரிவுகளாக **550** பேர்களுக்கு CBC (Children Bible Class) ஆசிரியர் பயிற்சிகளை நிறைவேற்ற தேவன் கிருபை தந்தார். மே மாதம் **6**ம் தேதி முதல் **16**ம் தேதி வரை நடைபெறவுள்ள CBC (VBS) ஊழியர்களுக்காக குறிப்பாக **20** ஆயிரத்திற்கும் அதிகமான ஆதிவாசி சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள். இதற்கான தேவை ரூ. **2,50,000/–** சந்திக்கப்பட பாரத்துடன் ஜெபியுங்கள்.

தேவனுக்கு சித்தமானால் நம் சுதேச ஊழியர்களில் குறிப்பாக அபிஷேகம் பெற்ற 60 போதகர்கள் தங்கள் B.Th., பட்டப்படிப்பை Allahabad Bible Seminary மூலமாக Correspondence Course –ல் Hindi Medium படித்து முடிக்க தேவன் கிருபை தந்தார். அவர்களுக்கான B.Th., பட்டமளிப்பு விழா தாகோத்தில் மே 3ம் தேதி நடைபெறவுள்ளது. திருச்சபை வரலாற்றில் நம் ஊழியத்தின் மிக முக்கியமான ஒரு வளர்ச்சி, அதற்காக தேவனைத் துதியுங்கள். தேவனுக்குச் சித்தமானால் Shalom Bible Seminary ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள். பயங்கரமான கோடை வெயிலில் குடிக்க தண்ணீருக்காக வெகுதூரம் அலைய வேண்டிய பீல் ஆதிவாசி கிராம மக்களை, தேவன் பாதுகாத்து, பராமரிக்க கருத்தாய் ஜெபியுங்கள். தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்காகவும், குஜராத் பணித்தள அலுவலகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜெபித்துத் தாங்கும் உங்கள் யாவருக்காகவும் நாங்களும் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.

**“உன்னை முத்திரை மோதிரமாக நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்”**

**–ஆகாய் 2:23**

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,



வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## அறிமுகப்படுத்த அன்பாய் வேண்டுகிறோம்...

பிரியமானவர்களே, இந்த அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள், இந்த இதழை வாசித்து விட்டு அப்படியே வைத்துவிடாமல் உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்தவ நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கொடுத்து ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்த அன்பாய் வேண்டுகிறோம்.

மேலும் இந்த இதழ் உங்கள் இல்லத்திற்கோ, அலுவலகத்திற்கோ ஒரே பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வருமாயின் எங்களுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

# வளர்ந்து பெருகும் சபைகள்...

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; —இயேசு**

(மத்தேயு 16:18)

என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு (மத்தேயு 16:18) கூறுகிறார். சபைக்கு மூலைக்கல் இயேசுகிறிஸ்து அவர் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர். இயேசுகிறிஸ்து தான் சபைக்கு மணவாளன். உலகமெங்கும் சென்று சுவிஷேசம் அறிவித்து, சீஷர்களை உருவாக்கி சபைகளைக் கட்டுவது தான் அவருடைய சித்தமாகும். பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் மூலம் அப்போஸ்தலர் மூலமாக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு வளருவதை நாம் பார்க்கிறோம்.

ஆதி அப்போஸ்தல நடபடிகள் தான் நமக்கு சபை வளர்ச்சிக்கான ஆதாரமாகும். பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் சபைகள் உருவானபோது நான் அப்போஸ்தலர் நடபடிகளைத் தான் எப்போதும் தியானிப்பேன். ஏனெனில் ஆதி அப்போஸதல சபை வளர்ந்து பெருகின சபையாக எண்ணிக்கையில் மட்டுமல்ல, ஆவிக்குரிய ஆபிஷேகத்திலும் வளர்ந்து காணப்படுகிறது. இதைக் குறித்து சில காரியங்களைத் தியானிப்போம்.

**இரட்சிக்கப்பட்டவர்களால் உண்டான சபை**

ஆதி அப்போஸ்தல சபையில் 120 பேர் அங்கமாயிருந்த சபையில் (அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில்) 3000 பேர் சபையில் சேர்ந்தார்கள். அப். 2:37—ல் வாசிக்கிறோம் பேதுருவின் செய்தியைக் கேட்டபோது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள். பேதுரு அவர்களை நோக்கி "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்கிறார். சபை அங்கத்தினராக ஒருவர் இருக்க வேண்டுமென்றால் முதலாவது மனம் திரும்ப வேண்டும், பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெறவேண்டும். அதன்பின்பு ஞானஸ்நானம் பெறவேண்டும். பாவமன்னிப்பின் நிச்சயமின்றி கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தபடியால் ஞானஸ்நானம் எடுப்பதின் மூலம் தேவனுடைய ராஜ்ஜயத்தில் பிரவேசிக்க முடியாது. மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெறும் போது தான் ஜீவ புஸ்தகத்தில் நம் பெயர் எழுப்படுகிறது. அப்படி எழுதப்படும் போதுதான் சபை புத்தகத்தில் நமது பெயர் எழுதுப்படுவதில் பயன் உண்டு. அல்லாவிட்டால் மரணம் நம்மை சந்திக்கும் போதோ அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதோ "ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படாதவனாக காணப்பட்டவன்

எவனோ அவன் அக்கினி கடலிலே தள்ளப்படுவான். ஆகவே சபை வளர்ந்து பெருக வேண்டுமென்றால் இரட்சிக்கப்பட்ட ஜனங்களாக சபை அங்கத்தினர்கள் மாறவேண்டும்.

**சபை இரட்சிக்கப்படுகிறவர்களால் நிரம்பியது**

120 பேர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சபை ஊழியம் வளர்ந்து பெருகியது. அப். 2:41–ல் 3000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப். 2:47–ல் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப். 4:4–ல் வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது. அப். 5:14–ல் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடமாக மிக அதிகமாய் சேர்க்கப்பட்டார்கள். அப். 6:7–ல் தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று, ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். மேலும் ஒவ்வொரு அதிகாரங்களிலும் சபைகள் எண்ணிக்கையிலும், ஆத்துமாக்களிலும் பெருகி வளர்ந்தது. அதற்கான காரணங்கள் பல இருந்தாலும் ஒரு சில காரியங்களைக் காண்போம்.

**பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்**

ஆதி அப்போஸ்தல சபைகளில் அனைவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஆவியின் வரங்களை பெற்றவர்களாய் இருந்தார்கள். "கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்." (அப். 2:17,18) ஆவியானவரால் சபையில் உள்ள விசுவாசிகள் நிரப்பப்படும்போது எழுப்புதல் உண்டாகிறது.

**சாட்சி கொடுத்தால்**

"கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்". அப். 4:33. ஆத்துமாக்கள் தினமும் சபையில் சேர்வதற்குக் காரணம் என்னவென்றால், உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து அவர்கள் பலத்த சாட்சி கொடுத்தார்கள். பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலுக்குக் காரணம் என்னவென்றால் புதிதாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை சாட்சியாக பகிர்ந்து கொள்வதுதான். தங்கள் வாழ்க்கையில் நடந்த அற்புதங்களை பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல அந்த இயேசுவே

இரட்சகர் என்று சாட்சி கொடுத்த படியால்தான் ஆத்துமாக்கள் சபைகளில் கூடி வர ஆரம்பித்துள்ளார்கள்.

**பாடுகளை ஏற்றுக் கொண்ட சபை**

**"அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்".....** (அப். 5:41) கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், சுவிஷேசத்திற்காகவும் அவர்கள் அவமானப்படுவதை பாக்கியமாக கருதினார்கள். சிறைச்சாலையில் வைக்கப்பட்டு, அடிக்கப்பட்டார்கள். துரத்தப்பட்டார்கள், சிரச்சேதம் பண்ணப்பட்டார்கள். ஆனால் பாடுகள் அவர்களை கிறிஸ்துவின் அன்பினின்று பிரிக்கவில்லை. சுவிஷேசத்தை அறிவிக்க அவர்கள் வெட்கப்படவில்லை. **"தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்."** ..... (அப். 5:42)

**ஜெப ஆவியால் நிரப்பப்பட்ட சபை**


அப்போஸ்தலர் நடபடிகள் 1ம் அதிகாரத்திலிருந்து வாசிக்கும்போது நாம் காணும் ஒரு பெரிய காரியம் ஜெபம். சபைகள் தோறும் ஆராதனை, துதி மட்டுமல்ல ஜெபவேளை என்று ஜெபிக்கும் சபை காணப்பட்டது. உபத்திரவ நேரங்களில் ஜெபித்தார்கள், ஊழியர்களுக்காக ஜெபித்தார்கள், தேசத்திற்காக ஜெபித்தார்கள், உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக ஜெபித்தார்கள். **"அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்"**..... (அப். 5:41)

**அனுப்புகிற சபை**

அப்போஸ்தல சபை அனுப்புகிற சபை. அப்போஸ்தலர் 10ம் அதிகாரம் குறிப்பானஅத்தியாயமாகும். யூதர்களுக்கு மட்டமல்ல புறஜாதிகள் மத்தியில் ஆவியானவர் கிரியை செய்து கிறிஸ்துவின் அன்பு வெளிப்படுவதை அப்போஸ்தலர் பேதுரு மூலம் ஆவியானவர் வெளிப்படுத்தினார். 13ம் அதிகாரத்தில் மேலும் பூமியின் கடைசி எல்லை மட்டும் ஊழியர்கள் அனுப்பப்படுவது தேவனுடைய திட்டம் என்பதை ஆவியானவர் மூலம் பெற்றுக் கொண்டு பவுலும் பர்னபாவும் அனுப்பப்படுகிறார்கள். நற்செய்தி அறிவிக்கப்பட்டு சபைகள் ஸ்தாபிக்கப்படுகிறது. "யாரை நான் அனுப்புவேன்" என்ற குரலுக்கு செவிசாய்க்கும் சபையாக வளரவேண்டும்.

தேவன்தாமே நம் தலைமுறையில் நம் சபைகள் மூலமாக நம் தேசத்தில் மிகப் பெரிய எழுப்புதலை செய்வாராக!

# ஆவியின் அருள் மழைப் பொழிந்தது....



கொடுப்பைகுழி CSI தேவாலயம்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கொடுப்பைகுழி என்ற கிராமத்தில் அமைந்துள்ள CSI ஆலயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 16,17,18 ஆகிய மூன்று தினங்கள் நற்செய்திக் கூட்டங்கள் ஷாலோம் ஊழியத்தின் சார்பில் நடைபெற்றன. மூன்று நாட்கள் இரவு கூட்டங்களிலும், ஞாயிறு ஆராதனையிலும் திரளாக தெய்வப் பிள்ளைகள் கூடினார்கள். நமது தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் **சகோ. பிரான்சிஸ், சகோ. ரதீஸ், சகோ. ராஜமாணிக்கம்** (Key Board) ஆகியோர் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தலைமையில் இந்த ஊழியங்களை நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் பாடல் வேளை, ஆராதனை வேளை மற்றும் செய்தி வேளைகளிலும் ஆவியானவரின் அருள் மழை பொழிந்தது. கூடிவந்த மக்களில் பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவின் உண்மை சீஷராய் வாழத் தங்களை அர்ப்பணித்தனர். நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஆதரிக்கவும் ஜெபத்துடன் தீர்மானித்துள்ளனர். ஒரு குடும்பத்தார் ரூ. 40,000/– ஐ நமது பணித்தளத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்காக முன் பணமாக தந்து, கர்த்தரை மகிமைப் படுத்தினர். கர்த்தர்தாமே அந்தக் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பாராக!

சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சிறப்பு ஜெபக்கூடுகை நடத்தப்பட்டது. சுமார் 40 பேர் கலந்து கொண்டு, பாரத்துடன் ஜெபித்தார்கள். ஞாயிறு ஆராதனை முடிவடைந்ததும் வாலிபருக்கான சிறப்புக் கூடுகையில் 80 பேர் கலந்து கொண்டு, இந்தியாவின் இரட்சிப்புக்காகவும், ஷாலோம் ஊழியங்களுக்காகவும் கர்த்தருக்கென்று பரிசுத்தமாக வாழவும், ஊழியத்திற்கு முழு ஆதரவு தந்து கர்த்தரை மகிமைப்படுத்தவும் திடமான தீர்மானங்களை செய்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை!

அனைத்துக் கூட்டங்களிலும் இறைச் செய்திகளை நமது செய்தித் தொடர்பாளர் **சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் வழங்கினார்கள். நமது ஷாலோம் ஊழியத்தின் மார்த்தாண்டம் பகுதி முன்னேற்ற செயலர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கூட்டங்களை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். கொடுப்பைக்குழி CSI ஆலய செயலரும், நமது ஊழியத்தின் முக்கிய ஆதரவாளருமான **Dr.S. ஐசக்** அவர்கள் கூட்டங்களின் முழுப் பொறுப்பையும் ஏற்று மிகவும் சிறப்பாக உதவி செய்தார்கள். அத்திருச்சபையின் கமிட்டி அங்கத்தினர்களும், போதகர் **Rev. கிளாட்சன்** அவர்களும் ஷாலோம் ஊழியங்களை நேசித்து பேருதவி நல்கினார்கள். அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நன்றிகளைக் கூறுகிறோம்.

ஆவியின் பெருமழையை பொழிந்தது. தேவனுக்கே கோடாகோடி ஸ்தோத்திரங்கள்.

**"பனிபோல பெய்யும் பரிசுத்தரே**

**மழையாக பொழியும் ஆவியே"** – என்று உள்ளத்தில் பாடி பாடி மகிழ்ந்தோம்.



செய்தி வேளையில்
சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள்



கொடுப்பைக்குழி CSI சபை போதகர் அவர்கள்
அன்பளிப்புகள் வழங்குகிறார்கள்



ஆராதனை வேளை



நமது இசைக்குழு



கூடியிருந்த தேவ
ஜனங்களில் ஒரு பகுதி

# ஷாலோம் ஊழியத்தில் புதிய உதயம்....

## சென்னை கிளை அலுவலகம்

ஷாலோம் ஊழியப் பாதையில் சென்னை மாநகரிலுள்ள தேவதாசர்கள், சுவிசேஷகர்கள், போதகர்கள் வேலை மற்றும் தொழில் செய்பவர்கள் என பலதரப்பட்டோர் நமது ஊழியங்களை தாங்கி வருகிறார்கள். குறிப்பாக 1991ம் ஆண்டு ஊழியத்தின் ஆரம்ப பாதையில் **சகோ. கிளாட்சன் பாஸ்கரன், சகோ. சார்லஸ், சகோ. R.N. சாலமோன்** அதைத் தொடர்ந்து **சகோ. மனோகரன் ஜோசப், சகோ. காட்வின் ஜோசப்** என பலர் தங்களது அன்புக் கரங்களை நீட்டி அநேக தேவ பிள்ளைகளை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

இருப்பினும் சென்னை பட்டணத்திலிருந்து திட்டமிட்டு செயல்படவும், முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றவும், தாங்கும் சபைகள் மற்றும் தேவ பிள்ளைகளை எழுப்பவும், ஜெபக்கூடுகைகளை உருவாக்கவும், 07.03.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை சென்னை எக்மோர் ICCSA Centre –ல் ஷாலோம் மிஷனெரி ஆதரவாளர்களின் சிறப்பு கூடுகை மற்றும் Sharing Love Mission, Chennai Branch ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இக்கூடுகையில் நமது ஊழியங்களின் மிக நெருக்கமான ஆதரவாளர்கள் 56 பேர் குடும்பமாக கூடி வந்தார்கள். இந்த சிறப்பு கூடுகையை சகோ. கிளாட்சன் பாஸ்கரன் அவர்கள் முன்நின்று நடத்தினார்கள். ஆரம்ப ஜெபம் சகோ. ஜேக்கப் பாக்கியதாஸ் அவர்கள் ஏறெடுத்தார்கள். அதன்பின் சகோ. சுரேஷ் மற்றும் சகோ. பிரவின் ஆகியோர் பாடல் மற்றும் ஆராதனையை நடத்தித் தந்தார்கள். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தள செய்திகளை பகிர்ந்தபோது ஆவியானவரின் பிரசன்னத்தை உணர முடிந்தது. மேலும், பீல் மக்களின் மத்தியில் எழுப்புதலின் மேகத்தை உள்ளங்கை அளவு காண முடிந்தது. மேலும் அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊழியம் இன்று Shalom Diocese in India என்னும் திருமண்டலமாக உருவாகி, பேராயர் மற்றும் 77 போதகர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட வீடியோ படக்காட்சிகளைக் கண்டபோது அனைவரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். 2020ம் ஆண்டிற்குள் நிறைவேற்ற வேண்டிய ஊழியத் திட்டங்களான 7000 கிராமங்களில் 7000 சபைகள் 7000 பீல் சுதேச ஊழியர்கள் என்ற இந்த இலக்கினை அடைய தேவனால் கூடும். இந்த தரிசனப் பணியில் கூடுகைக்கு வந்த அனைவருமே தங்களை அர்ப்பணித்தார்கள். சிலர் ஆலயங்கள் கட்டவும், மூத்த சுதேச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள், ஊழியங்களுக்கு ஜெனரேட்டர், மற்றும் கிராம ஊழிய

ஆதரவு, ஆதிவாசி மாணவர் ஆதரவு என்று அதிகம் தாங்க முன் வந்தார்கள். மட்டுமின்றி புதிய ஆதரவாளர்களை அறிமுகப்படுத்தவும் முன்வந்தார்கள். முழு பீல் மக்கள் இரட்சிப்பில் ஊழியத்தை ஜெபத்தினால் தாங்க 15 பேர் தங்களது வீடுகளில் ஜெபக்கூடுகைகளை நடத்த முன் வந்துள்ளார்கள். 2 பேர் ஷாலோம் ஊழியங்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து காணிக்கைகளை சேகரித்து அனுப்ப பிரதிநிதிகளாக ஒப்புக் கொடுத்துள்ளார்கள்.

இனி வரும் நாட்கள் சென்னை வாழ் ஷாலோம் ஊழிய பங்காளர்கள் இணைந்து ஷாலோம் சென்னை கிளை என்ற அமைப்பில் செயல்பட ஜெபத்துடன் தீபம் ஏற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. செயல்படும் உறுப்பினர்களாக முதற்கட்டமாக 10 பேர் முன் வந்தார்கள். அதன்பின் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோர் தலைமையில் **Pas. ஞானசேகரன்** அவர்கள் அர்ப்பணிப்பின் ஜெபத்தை ஏறெடுத்தார்கள். **சகோ. சுதந்திரசிங்** அவர்கள் ஷாலோம் ஊழியத்திற்கான சிறப்பு ஆலோசகராக முன் நின்று செயல்பட அர்ப்பணித்தார்.

இறுதியாக **Bishop V. தேவதாஸ்** அவர்கள் சிறப்பு ஆசீர்வாத செய்தியை "நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரேமியா 30 :22) என்ற தலைப்பில் அளித்து ஜெபித்தார்கள். ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், தேவனுடைய வல்லமையும், ஆசீர்வாதங்களும் இறங்கியது. ஆசீர்வாத ஜெபத்துடன் கூடுகை நிறைவு பெற்றது. அனைவரும் ஐக்கிய விருந்தில் பங்கு பெற்று ஒருவரையொருவர் வாழ்த்தி திரும்பினர்.

இந்த கூடுகையை **சகோ. எபனேசர்** மற்றும் **சகோ. போஸ்** (ஷாலோம் முன்னேற்ற பணியாளர்கள்) சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். உடன் பங்காளர் யாவருக்கும் நன்றி கூறுகிறோம். தொடர்ந்து சென்னை ஷாலோம் பங்காளர்கள் இணைந்து ஜெபித்து செயல்பட இன்னும் பெரிய காரியங்களை செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

## *ஷாலோம் கிளை அலுவலகங்கள்*

| | |
|---|---|
| **சகோ. B. எபனேசர் டேனியல்,**<br>New No. 15, Old No. 59,<br>பஜனை கோயில் தெரு,<br>சூளைமேடு, சென்னை – 600–094<br>செல் : 093444–75468 | **சகோ. G. செல்வதுரை,**<br>**M.T.N.** பில்டிங்,<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 094876–89869 |

# சகோ. ஜீவி ஜெபராஜ் அவர்களின்

*பணித்தள பார்வை அறிக்கை....*

கர்த்தருடைய பெரிதான கிருபையாலும், தேவ வழி நடத்துதலின் படியும் இராஜஸ்தான் மாநிலத்திலுள் ஷாலோம் பணித்தளங்களில் 14 சபைகளை சந்திக்கவும், சபைகளில் மூப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தவும், சபையின் மூப்பர்களுக்கு முக்கிய பொறுப்புகளைப் பற்றிய வேதாகம அடிப்படை ஆலோசனைகளை வழங்கி, ஜெபித்திடவும் தேவன் எனக்கு கிருபை செய்தார். Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்களும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் இக்கூட்டங்களை சிறப்பாகத் திட்டமிட்டு ஒழுங்கு செய்து ஊழியத்தை ஆசீர்வாதமாக பயனுள்ள விதத்தில் நடத்திடவும் உதவி செய்தார்கள்.

- 10–03–10 அன்று கச்சார்வாடி சபையில் நடந்த கூட்டத்தில் 59 பேர்கள் கலந்துகொண்டார்கள்.
- 11–03–10 அன்று பாடலா சபை கூடுகையில் 55–க்கும் அதிகமான பேர்கள் கலந்துகொண்டார்கள். 23 பேர் சாட்சி கூறினார்கள்.
- 12–03–10 அன்று மகர்தா பகுதி அம்பாபாடா சபையில் 41 விசுவாசிகள் கலந்துகொண்டார்கள்.
- 13–03–10 அன்று கோய்க்கா சபையில் 65 விசுவாசிகள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.
- 14–03–10 அன்று டிக்கிடி சபையில் நடைபெற்ற ஞாயிறு சிறப்பு ஆராதனையில் கலந்துகொண்டு தேவசெய்தி வழங்கிட தேவன் கிருபை செய்தார்.
- 15–03–10 அன்று சிமல்கேடா சபை கூடுகையில் 59 விசுவாசிகள் கலந்துகொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், சரீர சுகத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.
- 16–03–10 அன்று பொட்டாலியா சபை கூட்டத்தில் 74 விசுவாசிகள் கலந்துகொண்டு, தங்கள் வாழ்க்கையில் ஆவிக்குரிய எழுப்புதல் பெற்று சாட்சி கொடுத்தார்கள்.
- 17–03–10 அன்று கும்புரா சபை கூடுகையில் 68 விசுவாசிகள் கலந்துகொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றார்கள். 12 பேர் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

- 18–03–10 அன்று கதேடியா கூடுகையில் 53 விசுவாசிகள் கலந்துகொண்டு தேவஆசீர்வாதம் பெற்றனர். பாவம், சாபம், வியாதியிலிருந்து விடுதலை பெற்று சாட்சி கூறினார்கள்.

- 19–03–10 அன்று பேடவ் சபை கூடுகையில் 69 விசுவாசிகள் கலந்துகொண்டு வேத வசன அடிப்படைச் சத்தியங்களை கேட்டு ஆசீர்வாதங்களைப் பெற்று பலர் சாட்சி கூறினார்கள்.

- 20–03–10 அன்று ஹேஜ்மல் சபை கூடுகையில் 29–க்கும் அதிகமானோர் வேத வசன சத்தியங்களை ஏற்றுக்கொண்டு, தேவ ஆசீர்வாதம் பெற்று சாட்சி கூறினார்கள்.

- 22–03–10 அன்று தாட்கா சபை கூடுகையில் 95–க்கும் அதிகமானோர் வேத வசன சத்தியங்களை ஏற்றுக்கொண்டு, தேவஆசீர்வாதம் பெற்று சாட்சி கூறினார்கள்.

- 23–03–10 அன்று காரியா சபை கூடுகையில் 29 பேர்கள் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

- 24–03–10 அன்று கொட்டாரா சபை கூடுகையில் 101 விசுவாசிகள் கலந்துகொண்டு வேத வசன அடிப்படைச் சத்தியங்களை மிக ஆர்வமாக பெராயா சபை மக்களைப்போல வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

**மொத்தம் 14 கிராமங்களை சந்திக்க தேவன் கிருபை பாராட்டினார். கூட்டங்களில் மொத்தம் 897க்கும் அதிகமானோர் கலந்து கொண்டார்கள். இதில் 89 பேர் தேவனுடைய அற்புதங்களைப் பெற்று சாட்சி கூறினார்கள். மேற் கண்ட கிராமங்கள் இராஜஸ்தான் மாநிலத்தில் எளிதில் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு மிகவும் உள்ளடங்கியவைகள் ஆகும். இப்பகுதியில் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்க, கிறிஸ்துவுக்குள் வழிநடத்திட, வேத வசனங்களை விளக்கிக்கூறி, சத்தியத்திற்குள் வழிநடத்திட ஆட்கள் இல்லை என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிகிறது. படிப்பறிவு, மருத்துவ வசதி, உலக ஞானம் கூட இல்லாத, வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இப்பாமர மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய, கற்றவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் கர்த்தருக்காக தங்களை அர்ப்பணித்தவர்கள் தேவை.**

இப்படிக்கு, கர்த்தருடைய பணியில்

**சகோ. ஜீவி ஜெபராஜ்**

கிறிஸ்தவ மிஷனெரி சேரா இந்திய ஊழியர்கள்

# DELHI MIZO CHRISTIAN FELLOWSHIP (DMCF)

## பணித்தள வருகை

நாங்கள் DMCF மூலமாக ஷாலோம் ஊழியங்களுக்கு சில வருடங்களாக சிறிய, சிறிய உதவிகள் செய்து வருகிறோம். நாங்கள் ஆறுபேர் கொண்ட குழுவாக மார்ச் 13முதல் 15 வரை ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிட தேவன் கிருபை பாராட்டினார்.

மார்ச் 13ம் தேதி காலை குஜராத் தாகோத் வந்து சேர்ந்தோம். அன்று மத்தியப்பிரதேசத்தில் நடந்த ஷாலோம் சுதேச ஊழியர் கூடுகையில் பங்கு பெற்றோம். எங்களுக்கு பீலி கலாச்சாரத்தின்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த ஊழியர் கூடுகையில் ஆராதனை வேளையும், விண்ணப்ப வேளையும் எங்களது உள்ளத்தைத் தொட்டது. 120 ஊழியர்களின் அர்ப்பணிப்பு வாழ்க்கையிலிருந்து நாங்கள் அநேகம் கற்றுக் கொண்டோம். மேலும் ஒரு சில ஊழியர்களின் துணைவியார்களையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார். அதே நாளில் 42 புதிய சுதேச ஊழியர் பயிற்சி பெற்ற மாணவர்களையும் சந்தித்தோம்.

அன்று இரவு நேரத்தில் Bishop தேவதாஸ் அவர்களுடன் நேரம் செலவிட்டோம். அவர்கள் ஷாலோம் ஊழியங்கள் எப்படி ஆரம்பிக்கப்பட்டது, மேலும் ஷாலோம் திருமண்டலத்தின் வருங்கால ஊழியத் திட்டங்கள் என்ன என்பது பற்றி கூறினார்கள். திருமண்டல ஆரம்பம், பிஷப் மற்றும் 77 போதகர் பிரதிஷ்டை ஆராதனைகளைக் குறித்து அறிந்த போது ஆண்டவரின் மகிமையான காரியம் இந்த ஊழியத்தின் மூலம் மக்களிடம் நடைபெறுவதைக் காண முடிந்தது.

மறுநாள் ஞாயிறு நாங்கள் மூன்று குழுவாக பிரிந்து சபைகளை சந்தித்தோம். நானும் எனது மனைவியும் Bishop தேவதாஸ் அவர்களுடன் தாகோத்திலிருந்து 45 கி.மீ தொலைவிலுள்ள பிஜல்பூர் (மத்தியப்பிரதேசம்) என்ற கிராமத்திற்குச் சென்றோம். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுடன் Rev. Lal Chawimawia மற்றும் Miss.Vanlaldiki ஆகியோர் தாகோத் அருகிலுள்ள கங்கேலா கிராமத்திற்குச் சென்றார்கள். திரு. ஜெயராஜ் மற்றும் திருமதி லீலா சாமுவேலுடன் Mr. & Mrs. Liachninga மத்தியப்பிரதேசத்திலுள்ள சபைக்குச் சென்றார்கள். நாங்கள் அனைவரும் கிராமங்களிலுள்ள அழகான சபைகளையும், சபைகள் நிரம்பி வழிகின்றதையும் பார்த்து மனம் மகிழ்ந்தோம். மேலும் ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் சபைகளிலும் தேவ செய்தி அளித்தோம். மேலும் இந்த சபைகளின் மூலம் நாங்களும் ஆசீர்வாதம் பெற்றோம். ஷாலோம் சபையிலுள்ள விசுவாசிகளிடமும் பேச முடிந்தது. நான் மத்தியப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஊழியர் கூடுகைகளிலும் ஷாலோம் அலுவலக ஊழியர் மத்தியிலும் பேச தேவன் கிருபை செய்தார். 100 ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் கொடூரமானவர்களாக இருந்த மிஷோ இன மக்களை தேவன் மாற்றி ஆயிரக்கணக்கான மருத்துவர்களையும், இஞ்சினியர்களையும், அமைச்சர்களையும் அரசாங்க உயர் அதிகாரிகளையும் உருவாக்கியுள்ளார். மிஷோ இன மக்களையே தேவனால் மாற்ற முடியுமானால், ஏன் இந்த பீல் ஜனங்களையும் மாற்ற முடியாது? எங்களது உள்ளான ஆசையும், ஜெபமும் முழு பீல் மக்களையும் இரட்சித்து நித்திய ஜீவனை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே.

Rev. Dr. லால் சுங்லியானா

## Concern Network, New Delhi, Director Dr. Lal Chunliana மற்றும் Mizo Christian Fellowship குழுவினரின் பணித்தள வருகை (மார்ச் 13,14,15)





கலாச்சார வறவேற்பு



ம.பி. ஊழியர் கூடுகையில் தேவ செய்தி



கங்கேலா ஆலயத்தில் தேவ செய்தி



ஷாலோம் விடுதி கட்டடப்பணி பார்வையிட்டு, ஜெபம் செய்தல்



ராஜஸ்தான், பிஜல்பூர் விடுதி பிள்ளைகளுடன்

## Bro. ஜெபராஜ் (Serah India Ministries Chennai) அவர்களின் பணித்தள வருகை (10-24-மார்ச் -2010)





# Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர் (கோவை) அவர்களின்

## பணித்தள வருகை (மார்ச் 16,17,18)





குஜராத், கங்கேலா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு





Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர் அவர்கள் மூலமாக இராஜஸ்தான் சுதேச ஊழியர்களுக்கு 500 வேதாகமங்கள் மற்றும் கங்கேலா சபை விசுவாசிகளுக்கு 500 வேதாகமங்கள் வழங்கப்பட்டன.





Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர் அவர்கள் தேத்லா (ம.பி) கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.





அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர் அவர்கள் ஞாயிறு ஆராதனையில்

# Pr. Rein Hard Chandra Sekar *(கோவை) அவர்களின்*

## *பணித்தள அனுபவங்கள்*

நம் பாரத தேசத்தில் வாழும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் கடந்த 19 வருடங்களாக அன்பு சகோதரர் வே. தேவதாஸ் குடும்பமாக ஊழியம் செய்து, சுதேச ஊழியர்களை எழுப்பி, கிராம ஆலயங்களை கட்டி தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து வருகிறார்கள். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஷாலோம் பணித்தளத்தை பார்வையிட்டு ஊழியம் செய்தபோது தேவன் அதிகமான ஆத்தும பாரத்தையும், இந்த ஊழியத்தை தாங்கும்படியான பாரத்தையும் தந்தார். அந்தப்படியே மூன்று பீல் சுதேச ஊழியர் குடும்பங்களை மாதந்தோறும் ஜெபித்துத் தாங்கவும், குறைந்தது ஆயிரம் வேதப்புத்தகங்களை பீல் விசுவாசிகளுக்கும், சுதேச ஊழியர்களுக்கும் வழங்கவும் தீர்மானித்து இந்த வருடம் மார்ச் 16,17,18 ஆகிய தேதிகளில் ஷாலோம் பணித்தளங்களில் ஊழியம் செய்யும்படி தேவன் கிருபை செய்தார்.

27.03.2010 சனிக்கிழமையன்று குஜராத்திலுள்ள கங்கேலா என்ற கிராம ஊழியத்திற்கு சென்று தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டேன். அந்த கிராம ஆலயம் ஜனங்களால் நிரம்பி வழிந்தது. சுமார் 500க்கும் மேற்பட்டோர் அந்த ஆலயத்தில் கூடி ஆவியில் நிறைந்து பாடல்களைப் பாடி ஆண்டவரை ஆராதித்தது என் உள்ளத்தை பரவசப்படுத்தியது, மட்டுமல்லாமல் ஜெப விண்ணப்பங்களை ஏறெடுத்து ஜெபித்த போது, விசுவாசிகள் கண்ணீரோடும் உடைந்த உள்ளத்தோடும் ஜெபித்ததைப் பார்த்தபோது என் உள்ளம் உடைந்தது. அதன்பின்பு அவர்களுக்கு 500 வேதாகமங்களை ஜெபித்து வழங்க தேவன் கிருபை செய்தார். ஒரு வேதாகமத்திற்கு ரூபாய் 10 மட்டும் காணிக்கையாக செலுத்தி வாங்கி வேதத்தை தங்கள் கைகளில் உயர்த்தியவர்களாக தங்களது பிலோடி மொழியில் தேவன் எங்களுக்கு வேதத்தை தந்தார் என்று அனைவரும் ஆடலுடன் பாடி தேவனை ஆராதித்தார்கள். இவற்றைப் பார்த்து பரலோகமே மகிழ்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த கிராம ஆலயத்தைப் போல் 520 சபைகளில் எத்தனை ஆயிரம் வேதம் இந்த ஜனங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற மனபாரம் என்னை அழுத்தியது. இன்னும் வேதத்தை இவர்களுக்கு கொடுக்க தீர்மானித்தேன்.

மறுநாள் 29/03/2010 திங்களன்று ராஜஸ்தான் மாநிலம் கோய்கா என்ற பகுதியில் ஊழியம் செய்து வரும் 54 சுதேச ஊழியர்களைச் சந்தித்து தேவனுடைய வார்த்தைகளைக் கூறி ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஊற்றப்பட்டு புதிய பெலன் பெற்றார்கள். பின்பாக ஒவ்வொரு ஊழியர்களும் 5,10 வேதாகமங்களாக 500 வேதாகமங்கள் அவர்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனந்தத்தோடு வேதத்தை அரவணைத்து எடுத்துச் சென்றார்கள். இன்னும் பல நூறு வேதாகமங்கள் கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். விசுவாசிகள் 50 கி.மீ தூரத்திலிருந்து நடந்து பின்பு கிடைத்த வாகனங்களைப் பிடித்து கூட்டத்தில் பங்கு பெறுவதைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன்.

அதே நாளில் பிஜல்பூர் கிராமத்திலுள்ள ஷாலோம் பள்ளி, மற்றும் விடுதியை பார்வையிட தேவன் கிருபை செய்தார். பெரும்பாலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் சுமார் 300 ஆதிவாசி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு தேவன் கிருபை செய்துள்ளதை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினேன். அதே பீல் இனத்தைச் சேர்ந்த சகோ. நாத்து டின்டோர் மற்றும் அவர்களது மனைவி கிரேஷி இருவரும் சகோ. தேவதாஸ் அவர்களின் தரிசனத்தை குடும்பமாக ஏற்றுக் கொண்டு ஊழியம் செய்வதற்காக தேவனைத் துதிக்கிறேன். சரியான பள்ளிக்கூட அறைகள் இல்லை, இருக்கின்ற அறைகளில்தான் இரவும் தூங்க வேண்டிய நிலமை உள்ளது. அந்த அறைகளில் வைத்திருந்த மாணவர்களுடைய உடைந்து போன பெட்டிகள், தூங்குவதற்கு உபயோகப்படுத்தும் கிழிந்து போன போர்வைகள், மாணவர்கள் தங்கள் பாடப் புத்தகங்களை வைப்பதற்கு சரியான பள்ளி பேக்குகள் இல்லாமல் ஆங்காங்கே கிடந்த புத்தகங்களைப் பார்த்து என் மனம் உடைந்தது. மேலும் உடுப்பதற்கு ஷாலோம் ஊழியங்கள் மூலமாகக் வருடத்திற்கு இரண்டு உடுப்புகள் கொடுக்கப்படுகின்றன. இந்த உடுப்புகளையே மாற்றி மாற்றி போடுவதை பார்க்க முடிந்தது. மேலும் விடுதியை பராமரிப்பதற்கு மிக அவசியமான சிறிய, பெரிய பொருட்கள் தேவை என்பதையும காண முடிந்தது. எப்படியாவது 10 ஆயிரம் ஆதிவாசி மாணவர்களை படிக்க வைத்து சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்ற தரிசனத்துடன் கூடிய ஆதிவாசி மாணவர் கல்வித் திட்டத்தின் மூலம் நாம் பல மாணவர்களைத் தாங்க முன் வரவேண்டும். நம்மால் முடிந்தவரை இந்தத் திட்டத்திற்கு கை கொடுத்து உதவி செய்யவேண்டும் என தீர்மானித்துள்ளேன்.

28.03.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று மத்தியப் பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் விசுவாசிகளை சந்திக்கவும், முண்டத் கிராம ஆலயத்தில் நெருக்கமாகக் கூடியிருந்த விசுவாசிகளைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன். 85 குடும்பங்கள் உள்ள அந்த சபையில் நல்ல ஆலயம் கட்ட வாஞ்சிப்பதை அறிந்தேன். (60x25)1500 சதுர அடி அளவில் ரூ. நான்கு லட்சம் மதிப்பில் கட்டப்பட உள்ள ஆலயத்திற்கு ரூ.1000 காணிக்கையை 5 தவணையில் கட்டவதற்கு 100 பேர் முன் வந்தார்கள். எனது சபையின் சார்பில் ரூ. 3 லட்சங்கள் கொடுப்பதற்கு அர்ப்பணித்தேன். அதன்பின்பு 20 கி.மீ தொலைவிலுள்ள தேதலா கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். 3 ஆலய ஆராதனைகளிலும் குருத்தோலைகளைப் பிடித்து துதி ஆராதனை செய்த காட்சிகள் மறக்க முடியாது. எழுத்து அறிவில்லாத ஏழை பீல் ஆதிவாசி ஜனங்கள் வேதத்தை பாசத்துடன் கொண்டு வந்து ஆலய ஆராதனையில் பங்கேற்றது மறக்க முடியாது. மேலும் காட்டு கிராமங்களுக்குள் கஷ்டம் பிரச்சினைகள் வந்தபோது விசுவாசிகள் ஜெபித்து அற்புதங்களை பெற்ற சாட்சிகளை பகிர்ந்து காணிக்கைக் கொடுப்பதைப் பார்த்து வியப்படைந்தேன். தேவன் 3 நாட்களில் ஆத்தும பாரத்தினாலும் அபிஷேகத்தினாலும் நிரப்பினார். 2020க்குள் முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தில் தேவ ஒத்தாசையுடன் பணிபுரியும் அன்பு சகோ. தேவதாஸ் குடும்பத்தாருடன் இணைந்து சபையாக, ஊழியங்களாக, குடும்பமாக தேவ சித்தத்தை நிறைவேற்றலாம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

***Pas. Rainhard Chandra Sekar***

## *நமது பணித்தளத்திற்கு*
### ஊழியர்கள் தேவை...

**“அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்.” மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற நமது குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்ய 5 தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறார்கள்.

1. **ஆதிவாசி குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தை நிர்வகிக்க...**
2. **ஷாலோம் சபைகளை நிர்வகிக்க....**
3. **Media & Communication Director ஆக செயல்பட...**
4. **நிதித் துறையை (Accounts Department) நிர்வகிக்க...**
5. **நமது பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு Personal Assistant ஆக செயல்பட...**

இதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

***தேவன்தாமே உங்களையும் உங்களது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!***

**“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.”** யோவான் **12:26**

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

| | | |
|---|---|---|
| | **Cell :** | **09377445468 - Bro. V. Devadass,**<br>**09345675468 - Bro. Sam Gunaseelan** |


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu. Phone: 0461 - 2375468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

*மார்த்தாண்டத்தில்*

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை

கர்த்தருடைய மேலான கிருபையால் மார்த்தாண்டத்தில் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை நடத்த வேண்டுமென்று சகோ. சுந்தர்ராஜ் & சகோ. ஜார்ஜ் (ஷாலோம் செயற்குழு உறுப்பினர்கள்) ஆகியோர் தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு ஜெபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி **21.03.2010** அன்று மார்த்தாண்டம் சிங்களேர் நினைவு மண்டபத்தில் நடத்தப்பட்டது. ஆற்றூர் A.G. சபை பாடல் குழுவினர் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தித் தந்தார்கள். மார்த்தாண்டம் சேகர போதகர் **Rev. வில்லியம் தாமஸ்** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து, தலைமை உரையாற்றினார்கள். இந்தக் கூட்டத்தில் ஷாலோம் சுதேச ஊழியர்கள் மூன்று பேர் குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். மார்த்தாண்டம் A.G. சபை **போதகர் ஆமோஸ்** அவர்கள் ஜெபிக்க பல ஊழியர்களின் முன்னிலையில் ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

**பேராசிரியர் ஜார்ஜ்** அவர்கள் பணித்தள சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டார்கள். **Rt. Rev.Dr. V. தேவதாஸ்** அவர்கள் இறைச் செய்தி அளித்து ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். இந்தக் கூடுகையில் மார்த்தாண்டம் பிராந்திய ஷாலோம் பங்காளர்கள் **400**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. இந்தக் கூடுகையின் நிகழ்ச்சிகளை **ஆசிரியர் கிங்பர்ட்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

இக் கூட்ட ஒழுங்குகளை ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலக ஊழியர் **சகோ. செல்வதுரை** அவர்கள் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

## இணையதளத்தில் நமது அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **“அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்”** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web adress : http://www.shalommission.in**

## சென்னையில் நடைபெற்ற ஷாலோம் பங்காளர் கூடுகை (07.03.2010)





## மார்த்தாண்டத்தில் நடைபெற்ற ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை (21.03.2010)




செய்தி வேளை – Rt. Rev. Dr. V. தேவதாஸ்



3 சுதேச மிஷனெரி குடும்பங்கள் பிரதிஷ்டை ஆராதனை




ஊழியத்தைக் குறித்து – சகோ. ஜார்ஜ் (பாகோடு) அவர்கள்




வாழ்த்துரை – சகோ. சுந்தரராஜ், (பயணம்) அவர்கள்



நன்றியுரை – சகோ. செல்வதுரை அவர்கள்



கூடியிருந்த தேவ ஜனங்கள்

# ஷாலோம் மருத்துவ முகாம் (ஏப்ரல் 12-16-ஏப்ரல் - 2010)



நோயாளிகளை பரிசோதிக்கும் Dr. Able அவர்கள்



நோயாளிகளை பரிசோதிக்கும் Dr. Inba அவர்கள்



நோயாளிகளை பரிசோதிக்கும் Dr. Shiju அவர்கள்



நோயாளிக்கு ஊசிபோடப்படுகிறது






CBN ஸ்தாபனத்தின் மூலம் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன.



CBN ஸ்தாபனத்தின் மூலம் நடைபெறும் பரிசோதனை



காத்திருக்கும் நோயாளிகள்

# ஷாலோம் மருத்துவ முகாம்

தேவனுடைய மகா கிருபையால் நமது பணித்தளத்தில் மருத்துவ முகாம் ஏப்ரல் **14** முதல் **16**வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது**.** Dr. Able, Dr. Inba, Dr. Jolly, Dr. Shiju, மற்றும் Nurses Sis. Augustina, Sis. Pricilla, Sis. Vanaja, ஆகியோர் சென்னை மற்றும் வேலூரிலிருந்து வந்து நமது பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு மருத்துவ முகாமை சிறப்பாக நடத்தித் தந்தார்கள்**.** CBN-Hydrabad- லிருந்து Lab Technician Mr. Ashwin, அவர்கள் லேபரட்டரி பரிசோதனைகள் செய்வதற்கு உதவி செய்தார்கள்**.** அவர்களுக்கு உதவியாக தாகோத் CNI - Pastor **–**ன் மனைவி திருமதி**.** ஷைலுபேன் அவர்கள் உதவி செய்தார்கள்**.** மருந்துகள் கொடுப்பதற்கு தாகோத்திலிருந்து திரு**.** சுனில் அவர்கள் உதவி செய்தார்கள்**.** தியாகத்தோடு வந்து இந்த மருத்துவ முகாம்கள் நடத்திக் கொடுத்த அனைவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக**.** சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் Bro. Jeyaraj, Bro. Wallace, Bro. Prem, Bro. Pnta, Bro. Samuel, Bro. Dhivakar, Bro. Stephen, Bro. Bhavshing, Bro. Jaius Singh, Bro. Yakoop மற்றும் சகோதரிகள் Seela Samuel, Santhar Jeyaraj, Vasanthi Prem, Rameela Kattara, Evangeline, Julie, Lydia அனைவரும் நேரம் பார்க்காது உதவி செய்தார்கள்**.** தேவன் தம்முடைய பரலோகத்தின் ஆசீர்வாதத்தினால் அவர்களை ஆசீர்வதிப்பாராக**.**

**12.04.2010** ம் தேதி தாகோத்தில் நடந்த மருத்துவ முகாமில் **426** பேர் சிகிச்சை பெற்றார்கள்**.** **72** பேருக்கு இரத்த பரிசோதனை செய்யப்பட்டது**.** ஒரு T.B. நோயாளி மேற்படி மருத்துவ உதவிக்காக அரசாங்க மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்**.** **3** பேருக்கு ECG எடுக்கப்பட்டது**.** கங்கேலா கிராமத்திலிருந்து வந்த ஒரு சகோதரியின் இதயத்தில் ஒரு வால்வு வேலை செய்யவில்லை**.** இந்த சகோதரியை தேவன் குணப்படுத்த ஜெபியுங்கள்**.**

**13.04.2010** அன்று மேக்நகர், மத்தியப்பிரதேசத்தில் நடந்த மருத்துவ முகாமில் **407** பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது**.** **70** பேருக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது**.** இதில் **36** பேருக்கு மலேரியா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான மருத்துவம் பார்க்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன**.**

**14.04.2010** அன்று ராஜஸ்தானிலுள்ள கோய்கா கிராமத்தில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் **275** பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது**.** **48** பேருக்கு இரத்தப்பரிசோதனை செய்யப்பட்டது**.** அதில் ஒரு சிறுமிக்கு இரத்த சோகை நோய் இருப்பது தெரியவந்தது**.** இரத்தத்தில் 16H.B. இருப்பதற்கு பதிலாக வெறும் 2.5 H.B. மட்டும்தான் இருந்தது H.B. ஐ அதிகரிக்க உரிய சத்துள்ள உணவுப் பொருட்களை அந்த குழந்தைக்கு கொடுப்பதற்கு CBN பொறுப்பு எற்றுக் கொண்டது**.**

**15.04.2010** அன்று முதன் முறையாக மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜோபட்டில் நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். இங்கு **300** பேருக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. அதில் T.B. தொற்று நோயாளிகள் அநேகர் கண்டுபிடிக்கப்பட்டனர். T.B. கட்டிகள் உள்ள இரண்டு பேருக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான செலவை CBN. ஏற்றுக் கொண்டது. கேன்சரினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சகோதரி மேல் சிகிச்சைக்காக அரசாங்க மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.


**16.04.2010** அன்று ஜாலோத்தில் நடந்த மருத்துவ முகாமில் **406** பேர் சிகிச்சை பெற்றார்கள்.

Dr. Saiju (மார்த்தாண்டம்) அவர்கள் நமது பணித்தளத்தில் ஒரு ஆண்டு இருந்து பீல் ஆதிவாசி மக்களுக்கு மருத்துவ ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்களுடைய அர்ப்பணிப்பை தேவன் ஆசீர்வதிப்பாராக. தேவனுக்கே மகிமை! மருத்துவ முகாமிற்காக ஜெபித்த உங்கள் யாவருக்கும் நன்றி. எவ்வித தடையும் இல்லாமல் மருத்துவ முகாம்களை நடத்த உதவி செய்த தேவனைத் துதிககிறோம்.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

# பீல் ஆதிவாசி மாணவர் கல்வி திட்டம்

தேவ கிருபையினால் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 19 ஆண்டுகளில் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவப் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளிலிருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | – 560 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | – 90 |
| 3. | ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் | – 30 |
| 4. | ஷாலோம் விடுதி அந்தர்வேலியா, மத்தியபிரதேசம் | – 25 |
| 5. | ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் | – 25 |
| 6. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | – 220 |
| | மொத்தம் | – 950 |

ஆகவே கீழ்க்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி

எழுப்பவேண்டும்.

- ✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.
- ✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.
- ✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.
- ✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.
- ✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 300 புதிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2009 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2009ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

---

**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்"** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.



# ஜெபக்குறிப்புகள்

## பீல் மக்கள்

✞ பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

## Sharing Love Mission

✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

## Shalom Diocese in India

✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

## Shalom Charity Mission

✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

## அலுவலக ஊழியங்கள்

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

## ஊழியத் தேவைகள்

✞ இந்த மே மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

## CBC (Children Bible Class)

✞ நமது பணித்தளத்தில் இந்த மாதம் நடைபெறுகின்ற CBC –ஐ தேவன் ஆசீர்வதிக்கவும், அநேக சிறுவர்கள் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெறவும் ஜெபியுங்கள்.

✞ CBC –க்கான தேவைகள் ரூ. 2.5 லட்சங்கள். இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## B.Th., பட்டமளிப்பு விழா

✞ மே 3ம் தேதி குஜராத், தாகோத்தில் நடைபெறவுள்ள நமது ஷாலோம் சுதேத ஊழியர்களில் B.Th., முடித்த 60 பேருக்கு பட்டமளிப்புவிழா சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற ஜெபியுங்கள்.

# மரியா உட்வொர்த் எற்றர்



மிஷனெரி முன்னோடிகள்

**மரியா உட்வொர்த் எற்றர்** (Maria Woodworth-Etter) அமெரிக்காவில், ஒகியோவிலுள்ள லிஸ்பனில் ஒரு பண்ணையில் 1844ஆம் ஆண்டு மரியா பிறந்தார். தகப்பனார் வேலை செய்துகொண்டிருந்தபோது மரணமடைந்ததால் அவருடைய கல்வியும் தடைபட்டது. 13 வயதாக இருக்கும்போது பிரகாசிக்கும் ஒரு ஒளியாக இருப்பார் என்று அவரை வழி நடத்திய பிரசங்கியார் ஜெபித்தார். பெருவழிகளிலும், வேலிகளிலும் சென்று இழந்து போன ஆடுகளை சேர்த்துக் கொண்டு வரும்படியாக தன்னை அழைக்கும் இயேசுவின் சத்தத்தைக் கேட்டார். மரியா தனது அழைப்பை நிறைவேற்ற ஒரு மிஷனெரியை திருமணம் செய்ய தீர்மானித்திருந்தார். ஆனால் PH உட்வொர்த் என்னும் முன்னாள் ராணுவ வீரர் ஒருவரை திருமணம் செய்து கொண்டார். இவரோ ஊழியத்தில் கொஞ்சமும் விருப்பம் இல்லாதவர். மரியாவின் ஊழியத்தைக் குறித்து அவதூறாகப் பேசி வருவார். மரியா 6 பிள்ளைகளுக்குத் தாயானார். அதில் 5 பேர் வியாதியில் மரித்தார்கள். மீதமுள்ள தனது ஒரு மகளை பேணி வளர்த்தும், கணவருக்கு இயன்ற உதவிகளைச் செய்தும் வந்தார். எந்த சூழ்நிலையிலும் தேவனை மனம் நொந்து கொள்ளவில்லை. மேலும் தேவனுடைய வார்த்தையை தேடினார். வேதாகமம் முழுவதிலும் பெண்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொண்டார். “மாமிசமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்” என்ற வார்த்தையின் மேல் விசுவாசம் வைத்து செயல்பட ஆரம்பித்தார். அதன்பிறகு ஒரு பெரிய தரிசனம் கிடைத்தது. தான் பெரும் வல்லமையினால் அபிஷேகம் செய்யப்பட்டார். பெண்கள் ஊழியம் செய்வதை அனுமதிக்காத அந்த நாட்களில் மரியா முதலாவது தனது சொந்த சமுதாயத்தில் உள்ள மக்கள் மத்தியில் ஊழியத்தை ஆரம்பித்தார். முதல் கூட்டத்தில் பேசும்போது மக்கள் மயங்கி கீழே விழுந்தார்கள். பாவ உணர்வடைந்து தரையிலே விழுந்தவர்கள் கண்ணீரோடு புலம்பிக் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு 9 எழுப்புதல் கூட்டங்களை நடத்தி, 200க்கும் மேற்பட்ட பிரசங்கங்களை நிகழ்த்தினார். மேலும் 2 சபைகளை நிறுவி, ஓய்வு நாள் பள்ளி துவங்கி அதில் 100 பேரை அங்கத்தினராக்கினார்.

சிலர் இவரது கூட்டங்களில் மனநோயாளிகளை கொண்டு வந்து அதன் மூலமாக சகோதரியின் ஊழியத்திற்கு களங்கம் விளைவிக்க முற்பட்டனர். இதனால் பல முறை காவல் துறையால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். பல நேரங்களில் கொலை மிரட்டல்கள், சுடப்படும் ஆபத்துக்கள் வந்த வண்ணமாகவே இருந்தது. ஆனால் ஒன்றைக் குறித்தும் பயப்படாமல் கூட்டங்களைத் திட்டமிட்டப்படி நடத்தி முடிப்பார். இப்படிப் பல போராட்டங்களை அவர்

சந்தித்தார். கணவர் PH உட்வொர்த் மரணமடைந்து 7 வருடம் கழித்து சாமுவேல் எற்றர் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர் சகோதரியின் ஊழியத்தில் மிகவும் உதவியாக இருந்தார்.

சகோதரி தோற்றத்தில் மிகவும் எளிமையானர், உயர்கல்வி படித்தவரும் அல்ல. குதிரை வண்டிகளிலும், ரயில் வண்டிகளிலும் தேசமெங்கும் பிரயாணம் செய்தார். பணம் இல்லாத பல வேளைகளிலும் தங்குவதற்கு வசதி இல்லாத இடங்களிலும் ஏதேனும் ஒரு கூடாரத்தில் தங்குவார். இந்த வசதிக்குறைவுகள் சகோதரியை ஒன்றும் செய்யவில்லை. எல்லா சமூகப் பிரிவினரும் அவருடைய வீட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். செல்வந்தர்கள் ஏழைகள் எல்லோரையும் ஒன்றுபோல நேசித்தார். ஆனால் பாவத்தின் மீதும், பிசாசின் மீதும் ஆவிக்குரிய மிக பயங்கர அதிகாரமுடையவர். பிரசங்கமானது ஆவியானவரின் வல்லமையை செய்து காண்பிக்க வேண்டும் எனக் கூறுவார். டெக்ஸாஸ் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணங்களில் நடந்த கூட்டங்கள் உலகை அசைத்து விட்டன. அப்பட்டணம் பெந்தெகொஸ்தே எழுப்புதலின் பட்டணமாக மாறிவிட்டது. இயேசுவின் ஸ்தானாபதிகள் எல்லா வாதங்களையும், சண்டைகளையும், பிரிவினைகளையும் உண்டுபண்ணுகிற எந்த கோட்பாடுகளையும் தத்துவங்களையும் உதறித்தள்ள வேண்டும் என்று கூறுவார். பெந்தெகொஸ்தே அனுபவமான பல பாஷை பேசுவதை தழுவிய தூய்மை இயக்கத்தின் முன்னோடி சுவிசேஷகியாக மரியா திகழ்ந்தார்.

45 வருட ஊழியத்திற்குப்பிறகு மேற்கு இந்தியனப்பாலிஸ் என்ற இடத்தில் 1918 மே 19ல் ஒரு ஆலயம் கட்டி கடைசி ஆறு ஆண்டுகள் ஊழியத்தை நிறைவேற்றினார். இது **"கூடார ஆராதனை"** என்று அழைக்கப்பட்டது. அந்நாட்களில் இருந்த பெரும் பேச்சாளர்கள் இந்த கூடார ஆலயத்தில் வந்து கூட்டங்களை நடத்தினர். ஸ்மித் விக்ளிஸ்வொர்த் சகோதரியின் ஊழியத்தில் ஒரு சீஷன் என கருதப்படுகிறார். சகோதரி மரணமடைந்தபின் 1925ல் இக்கூடார ஆலயத்தில் பல தொடர் கூட்டங்களை இவர் நடத்தினார்.

கர்த்தருடைய வீட்டிற்குச் செல்லுமுன் தனது இரண்டு கணவர்களையும் தனது ஆறு பிள்ளைகளையும் அடக்கம் செய்தார்கள். 60 வயதான அவரது ஒரே மகள் லிசி இறந்த போது அவரது அடக்க ஆராதனையில் கல்லறைக்குள் நோக்காமல் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து பரலோகத்தை நோக்கிப் பார்க்கும்படி மக்களை ஊக்கப்படுத்தினார். சகோதரி எற்றர் உபத்திரவத்தின் மத்தியிலும் அழுத்தத்தின் மத்தியிலும் தனது வாழ்நாள் முழுவதும் தேவனின் முழு ஆலோசனைக்கும் உண்மையுள்ளவராக இருந்தார். எப்போதுமே பூக்கள் வாடாமல் விரிந்திருக்கும் இடத்தில் விரைவில் நான் இருப்பேன் என்று கூறினார். நான் துருப்பிடித்து மாய்வதைவிட இயேசுவுக்காக விரைவில் கரைந்து போவேன் என்று கூறுவார். சகோதரி எற்றர் தனது 80ஆவது வயதில் இரைப்பை கோளாறினாலும், வீக்கத்தினாலும் பாதிக்கப்பட்டார். 1924ஆம் ஆண்டு மே மாதம் எந்த கஷ்டமுமின்றி மெதுவாக ஆழ்ந்த நித்திரைக்குள் மூழ்கி தனது முடிவைச் சந்தித்தார்.

# CBC (Children Bible Class - 2010)

ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான CBC நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 2008ஆம் ஆண்டில் **"இயேசுவே இரட்சகர்"** என்ற தலைப்பில் நாம் நடத்திய CBC –ல் **17,000** சிறுவர்களும், **2009**ஆம் ஆண்டில்**"விசுவாசமே ஜெயம்"** என்ற தலைப்பில் நாம் நடத்திய CBC –ல் சுமார் **20,000** சிறுவர்களும் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம் **"நல்ல போதகர் இயேசு"** என்கிற தலைப்பில் **25,000** சிறுவர்களுக்கு **–520** கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

***இதற்கான தேவைகள்:–***

**1.** 520 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்

**2.** 25,000 CBC புத்தகங்கள். **3.** Badge.

**4.** பாட்டு புத்தகங்கள் **(10,000)** **5.** கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets)

**CBC** புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 25,000 குழந்தைகளுக்கு **ரூ. 2.5 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ***மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.***

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!





CBC பயிற்சி புத்தகங்கள்

> **"மிகவும் சிறியவராகிய..... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"** *மத். 25:40*

# T¦jR[j§tÏ AYNWUôLj úRûYITÓm ETLWQeLs


❖ கூட்டங்கள் முகாம்கள் நடத்துவதற்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், மிக்சர் (ரூ.1 லட்சம் மதிப்பில்)








❖ பணித்தள காரியங்களை வீடியோ எடுக்க, மற்றும் செய்திகளை வீடியோ எடுத்து கிராமங்களில் உள்ள நம்முடைய விசுவாசிகளுக்கு அனுப்ப நல்ல ஒரு வீடியோ கேமரா (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ ஆடியோ ரெக்கார்டிங் ரூம் அமைக்கப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)

❖ ஆடியோ ரெக்கார்டிங் –ற்கான உபகரணங்கள் – பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், மற்றும் செய்திகள் 1000 கிராம சபைகளுக்கு அனுப்பப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ 10 முக்கிய ஊழிய பொறுப்பாளர்களுக்கு 10 மோட்டார் சைக்கிள் தேவை (ரூ. 35,000 x 10)



❖ Training Unit & Communication Department க்கு 3 கம்ப்யூட்டர் தேவை (ரூ. 30,000 x 3)



❖ ஆராதனைகள் சிறப்பாக நடத்துவதற்கு Drum Set (ரூ.50,000) மற்றும் Pad (ரூ.30,000) தேவை



❖ மூன்று மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு நல்ல 3 ஜெனரேட்டர்கள் தேவை. (ரூ. 40,000 x 3)



***தேவைகளுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்கள் உள்ளங்களில் பேசினால் மேற்கண்டவற்றில் ஏதாவது வாங்க காணிக்கையாகவோ அல்லது மேற்கண்ட உபகரணங்களாகவோ வாங்கிக் கொடுக்கலாம். கர்த்தர்தாமே உங்கள் குடும்பத்தை, ஊழியங்களை, தொழிலை ஆசீர்வதிப்பாராக...***



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

## தூத்துக்குடி பகுதி ஷாலோம் ஆதரவாளர்கள் கவனத்திற்கு...

**Rep : 023** **சகோ. சாம் குணசீலன்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9345675468
**Rep : 028** **சகோ. ஜான்சன்ஜெபராஜ்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9362617374
**Rep : 002** **சகோ. ஆலன் எல்விஸ்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9344727978
**Rep : 032** **சகோ. ஜான்சன்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9362672155
**Rep : 005** **சகோ. ஜெயபால்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9789718935
**Rep : 076** **சகோ. ரதீஷ் குமார்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 96006 - 95598
**Rep : 057** **சகோ. ஜெயபிரகாஷ்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9994077782
**Rep : 058** **சகோதரி பட்டுரோஸ்,** கோரம்பள்ளம், தூத்துக்குடி
**Rep : 059** **சகோதரி சிந்தியா,** கால்டுவெல் காலனி, தூத்துக்குடி
**Rep : 060** **சகோதரி ஜாய் கிரேஸ்,** கால்டுவெல் காலனி, தூத்துக்குடி
**Rep : 016** **சகோதரி. சாந்தி லிவிங்ஸ்டன்,**
17-A சுந்தரவேல்புரம் 2 வது தெரு, மேலூர், Ph: 2361059
**Rep : 031** **சகோதரி. செல்வசீலி** 133/10 S.M. புரம் 5வதுதெரு,
**Rep : 015** **சகோ. டேனியேல் கிருபாகரன்,**
6B-1A, பிரையண்ட்நகர் 3வது தெரு, Ph: 98431-15663
**Rep : 074** **Pas. சாமுவேல் சவுந்தர்**
IPM Church, பிரையண்ட்நகர் 11வது தெரு (மத்தி), தூத்துக்குடி.
**Rep : 044** **சகோ. ஜெபக்குமார்,** 1/12 Type I CampI அனல் மின் நகர், Ph:9486936040
**Rep : 046** **சகோ. பாலசிங்,** 107J,152 மில்லர்புரம், Ph: 0461-2311012
**Rep : 047** **சகோ. முத்து**
அமுல்யா சீ புட், C-97, Sipcot Industrial Complex மடத்தூர். Ph: 9894685538
**Rep : 048** **சகோ. செல்வராஜ்** Type II 211 CampI அனல்மின் நகர். Ph: 9600745589
**Rep : 035** **சகோ. தாமஸ்** 47A/1, பூபால்ராயர்புரம் 1வது தெரு, Ph: 9842509223
**Rep : 036** **சகோ. அன்டோ**
Bethesda Prayer House 107/26, 1B மில்லர்புரம் அண்ணாநகர் மேற்கு
**Rep : 045** **சகோ. காட்வின்**
Nila Sea Foods, 137 புதூர் பாண்டியாபுரம், Ph: 9443344754
**Rep : 062** **சகோ. பாஸ்கர்**
23-A, Pillayarkoil St, State Bank Colony. Ph: 9994025696, 9994170465
**Rep : 007** **பீட்டர் தனசிங்,** 2-4/419-D, Rajiv Nagar, 8th Street. Ph: 9843171045
**Rep : 027** **சகோதரி நிர்மலா ஃபெலிக்ஸன்**
No. 11 N.G.O. Colony, 3rd Street. Ph: 0461–2310766

ஷாலோம் ஊழியத்திற்காக தூத்துக்குடி பகுதியில் மேற்கண்ட பிரதிநிதிகள் காணிக்கைகளை சேகரித்து அனுப்பி வருகிறார்கள். இவர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். தேவன் தாமே இவர்களையும் இவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! **மேலும் ஆதரவாளர்களாகிய உங்களிடத்தில் இவர்களைத் தவிர வேறு யாராவது ஷாலோம் ஊழியங்களுக்கா காணிக்கை சேகரிக்க வந்தால், தயவு செய்து காணிக்கை கொடுக்காதீர்கள்.** எங்கள் தலைமை அலுவலகத்துடன் தொலைபேசியில் **(Ph:0461-2375468, Cell : 9345675468)** தொடர்பு கொண்டு உறுதி செய்துவிட்டு அதன்பின்பு காணிக்கைகளை கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ள மிக அன்பாய்க் கேட்கிறோம்.

குஜராத்தில் குப்பைத் தொட்டியில் கருக்கலைக்கப்பட்ட 14 சிசுக்களை போலீசார் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பாபு நகர் என்ற இடத்தில் எப்ரல் 19ம் தேதி காலை குப்பைத் தொட்டியில் 14 சிசுக்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். உடனடியாக அங்கு போலீசார் வந்து சிசுக்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

ஏப்ரல் மாதம் 14ம் தேதி ஐஸ்லாந்தில் உள்ள இஜாப்ஜலாஜோகுல் என்ற எரிமலை திடீரென வெடித்து தீ குழம்பைக் கொப்பளித்தது. இது பல கிலோ மீட்டர் தூரத்திற்கு பரவியது. எப்போதும் இல்லாத அளவு இந்த எரிமலை தனது சீற்றத்தை காட்டியது. அருகில் உள்ள பனிமலை மீதும் தாக்கி ஒரு புறம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த எரிமலையில் இருந்து வெளியேறிய புகை மற்றும் சாம்பல் வானத்தில் 11 கி.மீட்டர் சுற்றளவுக்கு பரவியது. இதன் காரணமாக ஐரோப்பாவில் இருந்து வெளியேற, உள்ளே வர வேண்டிய விமானங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

ஏப்ரல் 18ம் தேதி இரவு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் 7 பேர் பலியாயினர். 30 பேர் படுகாயமடைந்தனர். ஆப்கானிஸ்தான் சமான்கன் மாகாணத்தில் காபூலுக்கும் இ ஷெரீப் நகரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த பகுதியில் பெரும்பாலான வீடுகள் மண்ணால் கட்டப்பட்டவை. இந்த வீடுகள் இடிந்து விழுந்ததில் 7பேர் பலியாயினர். இந்த நில நடுக்கம் தலைநகர் காபூலிலும் அண்டை நாடுகளான உஸ்பெகிஸ்தானிலும் தஜிகிஸ்தானிலும் உணரப்பட்டது.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Rt. Rev. Dr. V. Devadass<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in

கிராம ஆலயம்

# சஜேலி

மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டதிலுள்ள மேக்நகர் தாலுகாவில் உள்ளடங்கிய கிராமம்தான் சஜேலி ஆகும். இந்த கிராமத்தில் சரியான போக்குவரத்து வசதிகள் கிடையாது. இங்கு வாழும் மனிதர்களின் தொழில் திருடுவது, கொள்ளையடிப்பது மற்றும் சாராயம் காய்ச்சி விற்பதாகும். இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறியாதவர்கள். மேலும் பிசாசின் பிடியிலும், சாபத்திலும், மந்திரவாதிகளின் கைக்குள்ளும் வாழ்பவர்கள். வியாதிப்பட்டால் மருத்துவரை அணுகாமல் மந்திரவாதிகளிடம் சென்று பூஜைகள் செய்து பலிகள் கொடுப்பது இவர்களது பரம்பரை வழக்கமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வந்தவர்தான் சகோ. பிராகாஷ் டாமோர்.

சகோ. பிரகாஷ் டாமோர் இயேசுவை அறியாததற்கு முன்னதாக இவரது வயிற்றில் ஒரு கட்டி இருந்தது மருத்துவமனை சென்று பணம் செலவு செய்தும் கட்டி குணமாகவில்லை. மந்திரவாதிகளிடம் சென்று பூஜைகள் செய்தார் ஒன்றும் பலனில்லை. ஆகவே வேதனையுடன் இருந்தபோது இந்த கிராமத்தின் அருகிலுள்ள காட்வாடா கிராமத்தில் சுதேச ஊழியரின் மூலம் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அதில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் கட்டியை மறையச் செய்து அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். அதன்பின் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக இவரது குடும்பத்தார் அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். தேவன் இவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்து ஊழியத்திற்கு அழைத்தார். ஆகவே இவர் குடும்பமாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து 2006ம் ஆண்டு ஊழியத்தை ஆரம்பித்தார். தற்போது 20 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழி நடத்தி வருகிறார். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே, ஆலயம் கட்ட தனது சொந்த நிலத்தை காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராம ஆலயம், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த Bro. K.N. ராஜன் – (இயேசு அதிசயங்கள் செய்கிறார் ஊழியங்கள்) அவர்கள் ஊழியத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியிலிருந்து கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வரலாம்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவனின் பெயர் : **காபிரியேல் பாபோர்**
தகப்பனார் பெயர் : கண்ணுபாய் பாபோர்
தாயார் பெயர் : சவிதாபேன்
பிறந்த நாள் : 24.10.1994
படிக்கும் வகுப்பு : VIIIth Std.,
சொந்த ஊரின் பெயர் : பீபாடா
மாவட்டம் : தாகோத்
மாநிலம் : குஜராத்

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:-**

காபிரியேல் பாபோரின் தந்தை சகோ. கண்ணுபாய் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து, எல்லாவிதமான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு மிகவும் மோசமான மனிதனாக வாழ்ந்து வந்தார். மேலும் இவர் அதிகமான வியாதிகளினாலும் பிசாசின் பிடியினாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இவர் சரியாக சாப்பிடக்கூட முடியாமல் பலவீனமாகக் காணப்பட்டார். இந்நிலையில் இந்த போராட்டங்களில் இருந்து விடுதலைபெற மந்திரவாதிகளை நாடி ஆடுகளையும், கோழிகளையும் பலி செலுத்தி பலவிதமான மந்திர கிரியைகளைச் செய்தார், ஆனால் எந்த ஒரு பலனுமில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு சகோ. தேவதாஸ் அவர்களிடம் ஜெபிக்கும்படி வந்தார். சகோதரர் அவருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு பிசாசின் போராட்டம் மற்றும் வியாதியின் கொடுமைகள் ஆகியவற்றில் இருந்து பூரண விடுதலை கொடுத்தார். இந்த அற்புதத்தை பெற்ற இவர் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்தார். அதன்பின் ஊழியம் செய்ய தேவன் பாரம் கொடுக்கவே தனது வாழ்வை அர்ப்பணித்து நமது ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** ஜெபம் பண்ணுவதிலும், பாடல் பாடுவதிலும் வேதம் வாசிப்பதிலும் அதிக உற்சாகம் உண்டு. கபடி விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. நன்றாகப் படிப்பான், சுறுசுறுப்பான மாணவன். படிப்பினை முடித்தபின் தேவனுடைய ஊழியக்காரனாக வேண்டுமென்ற வாஞ்சை உள்ளது.

**ஜெபியுங்கள்:-** இவன் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், இவனுடைய சரீரத்தில் அடிக்கடி வரும் பெலவீனங்கள் நீங்கவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mrs. Suganya Joseph -** Palayamkottai.

நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss